# உயிரினும் ஓம்பப்படும்

2019 - 2020

## இயல் - 1

## உரைநடை உலகம்

## தமிழ்மொழியின் நடை அழகியல்

### பயிற்சி வினாத்தாள் - 2

வகுப்பு : 12

மதிப்பெண் : 25

நேரம் : 45 நிமிடம்

I. பலவுள் தெரிக. 6x1 = 6

1. 'தொடியுடை தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர்
அ) பேரெயின் முறுவலார் ஆ) பொன்முடியார்
இ) கோவூர் கிழார் ஈ) மருதன் இளநாகனார்

2. கி. ராஜநாராயணன் எழுதிய சிறுநாவல்
அ) செம்மறி ஆ) கடா இ) கிடை ஈ) மறி

3. நீர்படு 'பசுங்கலம்' - இதில் 'பசுங்கலம்' என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) தொகைநிலை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

4. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

5. நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு, சீர்மைக்கு உள்ளானது பற்றிப் பாடியவர்
அ) பேரெயின் முறுவலார் ஆ) வெள்ளைக்குடி நாகனார்
இ) நற்றெருஉத்தனையார் ஈ) கோவூர்கிழார்

6. பாடலின் தளத்தைப் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது
அ) தொடரியல் வடிவம் ஆ) ஒலிக்கோலம்
இ) சொற்றொடர் நிலை ஈ) சொற்புலம்



classmate

Scanned by CamScanner

www.Padasalai.Org

II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 7 x 1 = 7

7. கூற்று சரியா? தவறா

கூற்று 1: தொன்மையான மொழி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்கிறது.

காரணம்: மொழித் தோன்ற அடிப்படையாக இருப்பது ஒலியே. ஒலியை வெவ்வேறு வடிவங்களில் உச்சரிக்கும் போது மொழித் தோன்றுகிறது.

அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்றும் காரணமும் சரி

இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி

8. கருத்து 1: இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2: தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் நெகிழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

9. சரியானதைத் தேர்க

அ) கடாஅ யானைக் கலிமான் பேக - முல்லைக் கலி

ஆ) புணரின் புணராது பொருளே - தொல்காப்பியம்

இ) இவன் தந்தை தந்தை - நற்றிணை

ஈ) யாமும் பாரியும் உளமே - புறநானூறு

10. பொருந்தாததைத் தேர்க

அ) கன்னி வடிவல் - தொகைமொழி

ஆ) பொய்படுசொல் - மறித்தாக்கம்

இ) சங்கப்பாடல்கள் - மறுதலைத் தொடர்

ஈ) கி. ராஜநாராயணன் - கிடை

11. கீழ்க்கண்டவற்றுள் யானையைக் குறிக்கும் சொல்

அ) சிந்துரம் ஆ) சிமயம் இ) மேழகம் ஈ) வற்காலி

12. சரியான நிறுத்தக்குறியுடைய தொடரைத் தேர்க

அ) "இலக்கியத்தின் பயன் பற்றித், தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு."



Scanned by CamScanner

இ) 'இலக்கியத்தின் பயன் பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு'.
ஈ) "இலக்கியத்தின் பயன் பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு".
ஏ) இலக்கியத்தின் 'பயன்' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.

13. பொருத்தித் தேர்க:

அ) கிடை - 1. நற்றிணை
ஆ) தமிழ்அழகியல் - 2. பேரெயின் முறுவலார்
இ) நீர்படும் பசுங்கலம் - 3. கி.ராஜநாராயணன்
ஈ) இடுக வெண்தோள் - 4. தி.சு. நடராசன்

அ) 3 4 2 1 ஆ) 3 4 1 2 இ) 3 1 4 2 ஈ) 3 2 4 1

14. ஏற்ற நிறுத்தற்குறியிடுக:

தொடியுடைய தோள் மணந்தனன் எனத் தொடங்கி ஒவ்வோர் அடியும் தனித்தனியே வினைமுற்றுகளோடு தன்னிறைவோடு முடிகின்றன

III. குறுவினா 2x2 = 4

15. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
16. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையில் வழக்குகளாக மாற்றுபவை எவை?

IV சிறுவினா

17. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். விளக்குக.

V அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 4x1=4

18. மரபுத் தொடருக்கான பொருளறிதல்

அவலை நினைத்து உரலை இடித்தல்

19. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றை கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துச் சக்தியாக அமைகின்றன.

20. விடைக்கேற்ற வினா தருக

தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.

21. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக

சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டுகின்றது.

---

எம். ஜி. ஜெகவண்டின்
கார்மல் மேல்நிலைப் பள்ளி,
நாகர்கோவில்-1.



classmate
Scanned by CamScanner

2019 - 2020

# உயிரினும் ஓம்பப்படும்

## இயல் - 1

## உரைநடை உலகம்

## தமிழ்மொழியின் நடை அழகியல்

**பயிற்சி வினாத்தாள் - 2**

வகுப்பு : 12

மதிப்பெண் : 25

நேரம் : 45 நிமிடம்

**விடைகள்**

I. பலவுள் தெரிக — 6x1 = 6

1. அ) பேரரையின் முழுவலார்
2. இ) கிடை
3. ஆ) பண்புத்தொகை
4. இ) தொல்காப்பியம்
5. அ) பேரரையின் முழுவலார்
6. அ) தொடரியல் வடிவம்.

II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக — 7x1 = 7

7. ஆ) கூற்றும் காரணமும் சரி
8. இ) இரண்டு கருத்தும் சரி
9. ஈ) யாதும் பரியும் உளவே – புறநானூறு
10. ஆ) பொய்படுசொல் – மறித்தாக்கம்.
11. அ) குஞ்சரம்.
12. ஈ) இலக்கியத்தின் 'பயன்' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்துண்டு.
13. ஆ) 3 4 1 2
14. 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கி, ஒவ்வோர் அடியும் தனித்தனியே வினைமுற்றுகளோடு, தன்னிறைவோடு முடிகின்றன.

classmate

PAGE

Scanned by CamScanner

III. குறுவினா : 2x2 = 4

15. கவிதையின் இயங்காற்றல்தான் நடை என்கிறது தொல்காப்பியம். ஒவ்வொரு பாவிற்கும் என்று தனித்தனியாக நடை அழகியல் உண்டு. 'நடை பெற்றியலும், நடை நவின்றொழுகும்' என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதே நடை எனப்படும்.

16. உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவையாகும்.

IV. சிறுவினா

17. சங்கப் பாடல்களில் ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் பெறும். இதனை அந்த நூல்களின் பாடல்களின் ஒலிப்பின்னல் எனலாம். ஒலிக்கோலங்கள் உணர்ச்சிகளை காட்டும். வன்மையான உணர்ச்சியைக் காட்ட வல்லின எழுத்துகள் மிகுதியாக அமையுமாறு உள்ள பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உயிர் ஒலிகள், குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகை இசையை அதிகமாக வெளிப்படுத்துகின்றன.

சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றும் வரும். சொல் விளையாட்டுகளும் சங்கப் பாடல்களில் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்குகின்றது.

V அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 4x1 = 4

18. அவலை நினைந்து உரலை இடித்தல் – எண்ணமும் செயலும் ஒன்று சேராமை
19. மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்தியாக அமைகின்றன.
20. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு எது ஆதாரமாக இருக்கின்றது?
21. சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் அமைதியிழந்து பேசும் தன்மையைக் காட்டுகின்றன.



Scanned by CamScanner